வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 10.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான கோப்பில் முதல் கையெழுத்திட்டார்.

தமிழகத்தின் விக்கிரவாண்டி தொகுதி உட்பட, 7 மாநிலங்களைச் சேர்ந்த 13 சட்டமன்ற தொகுதிகளுக்கு, அடுத்த மாதம் 10-ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான பிரஞ்ச் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க புதுச்சேரி, சென்னை மற்றும் காரைக்காலில் நடைபெற்ற வாக்குப் பதிவில் மொத்தம் 945 வாக்குகள் பதிவாயின.

புதுச்சேரியில் மரப்பாலம் வாய்க்கால் சீரமைப்பு பணியின் போது எதிர்பாராத விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, நிவாரண உதவிகளை வழங்கினார்.

*அலுவல் பொறுப்பு*

நேற்று 3-ஆவது முறையாக பதவி ஏற்ற பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அலுவல் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 9 கோடியே 30 லட்சம் விவசாயிகளுக்கு, 17-ஆவது தவணையாக, மொத்தம் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி வழங்குவதற்கான கோப்பில், அவர் முதலாவது கையெழுத்திட்டார். புதிய அரசின் இந்த முதலாவது முடிவு, விவசாயிகளின் நலனில் அரசுக்குள்ள அக்கறையின் வெளிப்பாடு என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார். வரவிருக்கும் காலங்களில், விவசாயிகள் மற்றும் வேளாண் துறையின் நன்மைக்கு, தமது அரசு, இன்னும் பல நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். விவசாய குடும்பங்களுக்கு, 3 தவணைகளாக, ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்குவதற்கான பிஎம்-கிசான் திட்டம் 2019-ஆம் ஆண்டு முதல் அமலாகி வருவதும், முற்றிலும் மத்திய நிதி ஆதரவுடன் கூடிய இத்திட்டத்தினால் இதுவரை 11 கோடிக்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்களின் வங்கி கணக்கில், மொத்தம் 3 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை செலுத்தப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*மோடி-நன்றி*

3-ஆவது முறையாக பிரதமர் பதவி ஏற்றதற்கு வாழ்த்து தெரிவித்த உலகத் தலைவர்கள் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி

தெரிவித்துக் கொண்டுள்ளார். கனடா அரசுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் கனடா உடன் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக, சமூக ஊடகத்தில், கனேடிய பிரதமர் திரு ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திக்கான பதிலில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இந்தியாவிற்கும் பின்லாந்திற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் ஏற்கனவே எட்டடப்பட்டுள்ள வேகத்தை இன்னும் அதிகரிப்பதில் இந்தியா பின்லாந்துடன் இணைந்து பாடுபடும் என்று பின்லாந்து பிரதமர் திரு பெட்டேரி ஆர்ப்போ-விற்கான பதில் பதிவில் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஸ்லோவினியா பிரதமர் திரு ராபர்ட் கோலாப் உகாண்டா அதிபர் திரு யோவேரி முசவேனி மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் வாழ்த்துச் செய்திகளுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். மைக்ரோ சாப்ட் நிறுவனர் திரு பில்கேட்சும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சுகாதாரம், வேளாண்மை, டிஜிட்டல் புரட்சி, பெண்கள் தலைமையிலான வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், உலகளாவிய முன்னேற்றத்திற்கான புதுமையாக்க உணர்வின் ஊற்றாக, இந்தியாவின் அந்தஸ்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி வலுப்படுத்தி இருப்பதாகவும் இந்தியா உட்பட உலகெங்கிலும் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதில் இந்தியா உடனான

கூட்டாண்மையைத் தொடர தாம் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு பில்கேட்ஸ் கூறி உள்ளார்.

*ஒடிசா*

ஒடிசாவில் பிஜேபி சார்பில் புதிய முதலமைச்சராக பதவி ஏற்கப் போவது யார் என்பதை தீர்மானிக்க அக்கட்சிக்குள் தீவிர ஆலோசனைகள் தொடர்கின்றன. பிஜேபி சட்டமன்றக் குழுவின் கூட்டம் நாளை காலை 11 மணிக்கு புவனேஸ்வரில் நடைபெற உள்ளது. பிஜேபி சட்டமன்றக் குழுவின் தலைவரை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளுக்கான மத்திய பார்வையாளர்களாக, கட்சி தலைமையால் நியமிக்கப்பட்டுள்ள, மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு பூபேந்திர யாதவ் ஆகியோர் இன்று இரவு அல்லது நாளை காலை புவனேஸ்வர் வந்து சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய முதலமைச்சரின் பதவி ஏற்பு விழாவிற்கு இன்னும் 2 நாட்களே எஞ்சி உள்ள நிலையில், மூத்த பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திரு சுரேஷ் பூஜாலி உட்பட பலரது பெயர்கள், ஒடிசா முதலமைச்சர் பதவிக்கு அடிபடுகின்றன. இவர்கள் அல்லாத வேறு ஒருவரிடம் அக்கட்சித் தலைமை, முதலமைச்சர் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. இதற்கிடையே, ஒடிசாவில் முதலாவது பிஜேபி முதலமைச்சரின் பதவி ஏற்பு விழாவிற்கான ஏற்பாடுகள்

ஒடிசாவில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. நாளை மறுநாள் நடைபெறும் பதவி ஏற்பு விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி, கலந்து கொள்வார் என்றும், புதிய முதலமைச்சரின் பதவி ஏற்பு விழாவிற்கு முன்பாக, அவர் புவனேஸ்வரில், மாபெரும் சாலை பவனி நடத்தக் கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. 147 உறுப்பினர் ஒடிசா சட்டமன்றத்திற்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில், பிஜேபி 78 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மை பெற்றுள்ளது.

இடைத் தேர்தல்

தமிழகத்தில் காலியாக உள்ள விக்கிரவாண்டி தொகுதி உட்பட 7 மாநிலங்களைச் சேர்ந்த 13 சட்டமன்ற தொகுதிகளுக்கு, அடுத்த மாதம் 10-ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் ஜுன் 14-ஆம் தேதி தொடங்கி, 21-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள ஜுன் 26-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும் என்றும், ஜுலை 10-ஆம் தேதி இடைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள், ஜுலை 13-ஆம் தேதி எண்ணப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இடைத் தேர்தல் நடைபெற உள்ள சட்டமன்ற தொகுதிகளில், மேற்கு வங்கத்தின் 4 தொகுதிகளும், இமாச்சல பிரதேஷ் 3, மற்றும், உத்தராகண்டில் 2 தொகுதிகளும் அடங்கும்.

ஐரோப்பிய தேர்தல்

ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான பிரஞ்ச் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க புதுச்சேரி, சென்னை மற்றும் காரைக்காலில் நடைபெற்ற வாக்குப் பதிவில் மொத்தம் 945 வாக்குகள் பதிவாயின. ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உள்ள 720 இடங்களில், இம்முறை பிரான்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 81 இடங்களுக்குப் பிரதிநிதிகளை தேர்தெடுப்பதற்கான தேர்தலில், கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 4 ஆயிரத்து 456 பிரஞ்ச் குடிமக்கள், வாக்குப் பெட்டி மூலம் வாக்களிக்க தகுதி பெற்று இருந்தனர். இத்தேர்தலுக்கென, புதுச்சேரியில் உள்ள பிரஞ்ச் துணை தூதரகம், மற்றும், சென்னையில் உள்ள பீரோ-டி-பிரான்ஸ் சார்பில் புதுச்சேரியில் 2 வாக்குச் சாவடிகளும், காரைக்கால் மற்றும் சென்னையில் தலா 1 வாக்குச் சாவடியும் அமைக்கப்பட்டு இருந்தன. புதுச்சேரிக்கான பிரஞ்ச் துணை தூதர் திருமதி லிசே டால்போ பர்ரே, புதுச்சேரியில் வாக்களித்து, வாக்களிக்கும் நடைமுறைகளை பார்வையிட்டார். ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் இம்முறை, 38 வெவ்வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், போட்டிக் களத்தில் இருந்தனர்.

உதவி

புதுச்சேரியில் அண்மையில், மரப்பாலம் வாய்க்கால் சீரமைப்பு பணியின் போது எதிர்பாராத விபத்தில் உயிர் இழந்த 5 பேரின்

குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய், மற்றும், காயம் அடைந்த மூவருக்கு தலா 3 லட்சம் ரூபாய் உதவிகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு சம்பத், மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

வேண்டுகோள்

புதுச்சேரியில் பொது இடங்களில் பேனர் வைக்க வேண்டாம் என மாவட்ட நிர்வாகம், பொது மக்களுக்கு, வேண்டுகோள் விடுத்துள்ளது. மழை-காற்றினால் பேனர்கள் சரிந்து பலர் உயிர் இழக்கும் சம்பவங்கள் நாட்டில் பல இடங்களில் நடக்கும் நிலையில், புதுச்சேரியில் தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகளின் அமலாக்கம் முடிந்த உடனேயே பொது இடங்களில் சட்ட விரோதமாக பேனர் வைக்கப்படுவது, துரதிருஷ்டவசமானது என்று, புதுச்சேரி வடக்கு பகுதி துணைக் கோட்ட மேஜிஸ்டிரேட் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் செய்திக் குறிப்பு ஒன்றில் கூறி உள்ளார். அரசிடம் அனுமதி பெறாமல் பொது இடங்களில் பேனர் வைப்பது சட்டப்படி குற்றம் என்றும், இத்தகைய குற்றத்திற்கு, சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். திருமணங்கள்

அல்லது மத திருவிழாக்களுக்கு பேனர் வைப்பதாக இருந்தாலும், சம்பந்தப்பட்ட திருமண மண்டபம் அல்லது கோவில் வாசலில், மக்கள் நடமாட்டத்தை தடுக்காத விதத்தில், 10-க்கு 10 அடி அளவுள்ள 2 பேனர்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும், சாலை ஓரங்கள், சாலை சந்திப்புகள் மற்றும் டிவைடர்களில் பேனர் வைக்க முற்றிலும் தடை விதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வானிலை

தென்னிந்தியப் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் வரும் 16-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 5 நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, படிப்படியாக உயரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் பந்தலூர், தேவாலா ஆகிய இடங்களில், தலா 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

உலக கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் அமெரிக்காவின் நியுயார்க் நகரில் இன்று இரவு நடைபெறும்

போட்டியில், தென்ஆப்பிரிக்க அணி, வங்கதேச அணியுடன் மோத உள்ளது. நேற்று ஓமன்-ஸ்காட்லாந்து அணிகளுக்கு இடையே ஆன்டிகுவாவில் நடைபெற்ற போட்டியில், ஸ்காட்லாந்து அணி, 7 விக்கெட் வித்தியாசத்திலும், உகாண்டா-வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே, கயானாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், வெஸ்ட் இண்டீஸ் அணி, 134 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் நேற்று மாலை பேருந்து ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்கியதன் பேரில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரிக்க தேசிய புலனாய்வு ஏஜன்சியின் அதிகாரிகள் குழு ஒன்று, இன்று அப்பகுதிக்கு சென்று சேர்ந்துள்ளது. சம்பவ இடத்தை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து, தீவிரவாதிகளை தேடுவதற்கான தீவிர பணிகளை ஏற்கனவே தொடக்கி உள்ளனர். தேடுதல் வேட்டையில் ஆளில்லாத குட்டி விமானங்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. உத்தரபிரதேஷ், டெல்லி மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த பயணிகளை, சிவகோரி கோவிலில் இருந்து வைஷ்னோ தேவி கோவிலுக்கு சென்று கொண்டிருந்த பேருந்து மீது, தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதால் பேருந்து சாலையில் இருந்து விலகி பள்ளத்தில் விழுந்தது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். 41 பேர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேருக்கு

துப்பாக்கி குண்டு பாய்ந்து காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. தீவிரவாத தாக்குதலில் உயிர்த் தியாகம் செய்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் கருணைத் தொகையும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படும் என, ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அறிவித்துள்ளார்.

*மணிப்பூர்*

மணிப்பூர் முதலமைச்சர் திரு பீரேன் சிங் நாளை அம்மாநிலத்தின் ஜிரிபாம் மாவட்டத்திற்கு பயணம் மேற்கொள்வதாக இருந்த நிலையில் முதலமைச்சரின் பாதுகாப்பிற்காக இன்று முன்கூட்டியே அப்பகுதிக்கு சென்ற பாதுகாப்பு குழுவினரின் கார் அணி மீது, ஆயுதம் தாங்கிய, அடையாளம் தெரியாத விஷமிகள் மறைந்திருந்து தாக்கியதில், காவலர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்தில் கூடுதல் பாதுகாப்பு படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, விஷமிகளைப் பிடிக்க தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான கோப்பில் முதல் கையெழுத்திட்டார்.

தமிழகத்தின் விக்கிரவாண்டி தொகுதி உட்பட, 7 மாநிலங்களைச் சேர்ந்த 13 சட்டமன்ற தொகுதிகளுக்கு, அடுத்த மாதம் 10-ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான பிரஞ்ச் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க புதுச்சேரி, சென்னை மற்றும் காரைக்காலில் நடைபெற்ற வாக்குப் பதிவில் மொத்தம் 945 வாக்குகள் பதிவாயின.

புதுச்சேரியில் மரப்பாலம் வாய்க்கால் சீரமைப்பு பணியின் போது எதிர்பாராத விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, நிவாரண உதவிகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------